

தனி பிரதி ரூ.10/-

Single Copy Rs.10/-

ANNUAL SUBSCRIPTION Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 50 | பாரிப்பு 9 | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜுன் 2019 |
|---|---|---|---|
| KADHIR 50 | PAARIPPU 9 | THIRUVALLUVAR AANDU 2050 | JUNE 2019 |





நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்





**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 9 (2018 - 2019)

## தொடரும்
## நம் பயணம் .......



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

தமிழ்நாடு பொறியியல் சங்க சென்னை இல்லம் புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த 02.06.2019 அன்று திறப்பு விழா செய்யப்பட்டது. இந்த புனரமைப்பிற்காக மிக குறைந்த நபர்களே நன்கொடை அளித்தார்கள். இருந்தாலும் பணியில் தொய்வில்லாமல் செய்து முடித்திருக்கிறோம். நன்கொடை வழங்கிய அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. இந்த மாத இறுதியில் சென்னை இல்லம் இயங்கத் தொடங்கும். பதினோரு மாதங்களுக்கு பிறகு சென்னை இல்லம் மீண்டும் இயங்கத் தொடங்குகிறது.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு காலி பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) 279 எண்ணிக்கைக்கு மே மாத இறுதியில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நீண்ட இடைவெளிக்கு பிறகு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான பெயர் பட்டியல் மே மாத இறுதியில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்த

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 279 பேர் இடம் பெற்றுள்ளதால், இது மிகப்பெரிய எண்ணிக்கையிலான பதவி உயர்வு பட்டியல் என்பதால் அரசில் உள்ள துறைகள் கொஞ்சம் கூடுதலான கால அவகாசம் எடுத்துக் கொள்ளும். விரைவில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் C.S.ராமலிங்கம் உதவி செயற்பொறியாளர் (மின்) ஓய்வு அவர்கள் 22.05.2019 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் பொறியாளர் V.சண்முகம் உதவிப் பொறியாளர் ஓய்வு அவர்களின் மனைவி திருமதி. S.கல்பனா அவர்கள் 23.05.2019 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# 02.06.2019 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 02.06.2019 ஞாயிற்றுக் கிழமை மதியம் 02.30 மணி அளவில் சென்னை பொறியியல் இல்லத்தில் மாநிலத் தலைவர் பொறியாளர் S.லீலாவதி அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் D. முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சென்னை கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் S.சண்முகானந்தன் அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் S.லீலாவதி அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் N.பாஸ்கர் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் மையச்சங்கத்தின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் பொறியாளர் D.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர்கள் V.இரவிச்சந்திரன் செயலாளர் மதுரை கிளை, V.பரமசிவம் தலைவர் சிவகங்கை கிளை, M.பஞ்சவர்ணம் முன்னாள் மாநிலத் தலைவர், T.ரவிச்சந்திரன் பொருளாளர் திண்டுக்கல் கிளை, M.சென்ராம் பொருளாளர் தேனி கிளை, C.பன்னீர்செல்வம் செயலாளர் சேலம் கிளை, G.பழனிச்சாமி முன்னாள் மேற்கு மண்டல செயலாளர், S.பார்த்தசாரதி துணைத் தலைவர் சென்னை கிளை, K.R.ஜெயராமன் செயலாளர் திருச்சி கிளை, R.V.இரவிச்சந்திரன் செயலாளர் விருதுநகர் கிளை, D.சந்திரன் இணைச்செயலாளர் வேலூர் கிளை, மூத்தப் பொறியாளர்கள் T.P.பாலசுப்ரமணியன், G.பாலசுப்ரமணியன், ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

பொங்கும் நிதி திட்டத்தில் மறைந்த திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் S.சண்முகவேல் இளநிலைப் பொறியாளர் அவர்களின் குடுப்பத்திற்கு காசோலையினை கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் G.முருகன் அவர்களிடம் பொதுச்செயலாளர் வழங்கினார்.

அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் G.ஞானசேகரன் வடக்கு மண்டல செயலாளர், R. சரவணமுருகன் தெற்கு மண்டல செயலாளர், P.தமிழ்செல்வம் மைய

மண்டல செயலாளர், D.வீரையன் கிழக்கு மண்டல செயலாளர், G.விஜயசேகர் மேற்கு மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

சென்னை பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து இல்லக் காப்பாளர் பொறியாளர் S.கண்ணன் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை கிளையின் சார்பாக கிளை துணைத்தலைவர் பொறியாளர் S. பார்த்தசாரதி அவர்களும் மையச்சங்கத்தின் சார்பாக மாநிலதுணைத்தலைவர் பொறியாளர் N.பாஸ்கர் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பொதுப்பணித்துறையில் நேர்மையான, திறமையான, நடுநிலையான நல்ல நிர்வாகம் நடைபெற துறைத்தலைமைக்கு IAS அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தில் (TNPSC) நீண்ட நாட்கள் நிலுவையில் உள்ள இளநிலைப்பொறியாளர் பதவிகள் தேர்வு செய்ய தமிழக அரசை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

4. 28 ஆண்டுகளாக அரசாணை எண்.1 பொபது நாள். 02.01.1990க்கு விதித்திருத்தம் வழங்கப்படாமல் உள்ளது. இதனால் ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப் பொறியாளர்களாக வந்தவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள். எனவே உடனடியாக விதித்திருத்தம் வழங்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. அரசாணை எண்.1 பொபது நாள். 02.01.1990 சம்பந்தமான உச்சநீதி மன்ற வழக்கில் மேற்கண்ட அரசாணைக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அரசாணைக்கு விதித்திருத்தம் விரைவில் வழங்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

6. பகுதி நேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பதவி பெயர்மாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து வழக்கு தொடர்வது என தீர்மானிக்கப்படுகிறது.

7. கமுக்க அறிக்கை (Confidential Report) அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் பெறப்பட்ட விவரங்களை பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

8. 2007 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை உள்ள இளநிலைப் பொறியாளர்களை கட்டிடம், நீர்ப்பாசனத்துறை என பிரிக்காமல் பொதுவான முதுநிலையில் வைத்து உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என இம்மாநில பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

9. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறையின் ஆணையை மதித்து உரிய கால இடைவெளியில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் குறை தீர்ப்பு கூட்டம் நடத்த தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களுக்கு அறிவுரை வழங்க அரசை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

10. பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து வரும் தினக்கூலி பணியாளர்களை பணிவரன் முறைப்படுத்த தமிழக அரசை இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11. நீர் நிலைகளை சிறப்பாக பராமரிக்க பாசன ஆய்வாளர் பதவிகளை நிரப்ப வேண்டும் என அரசை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா

புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லத்தின் திறப்பு விழா 02.06.2019 அன்று நடைபெற்றது.

முதல் நிகழ்வாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநிலத்தலைவர் தியாகச் செம்மல் சி.ப.சண்முகம் அவர்கள் ரிப்பன் வெட்டி கட்டிடத்தை திறந்து வைத்தார். பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கத்தை முன்னாள் பொதுச்செயலாளர் பொறியாளர் A.M. பாபு அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பின்னர் மூத்தப் பொறியாளர்களும், மையச்சங்க பொறுப்பாளர்களும் குத்துவிளக்கு ஏற்றினர். விழா கல்வெட்டினை தியாகச் செம்மல் சி.ப.சண்முகம் அவர்கள் திறந்து வைத்தார்.

அதற்குபிறகு மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகியது. மாநிலத்தலைவர் பொறியாளர் சு.லீலாவதி அவர்கள் தலைமையிலும், பொதுச்செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ். கண்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பொதுச்செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். தன்னுடைய உரையில் இந்த கட்டிடத்தில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டது, எவ்வாறு புதுப்பிக்கப்பட்டது என்பது குறித்து விளக்கினார் . இந்த கட்டிடம் சிறப்புற அமைய ஒத்துழைத்த அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

மூத்தப் பொறியாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை அணிவிக்கப்பட்டது. நன்கொடையாளர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. கட்டிட ஒப்பந்ததாரருக்கு சிறப்பு செய்யப்பட்டது.

அடுத்ததாக கட்டிடத்தை திறந்து வைத்த முன்னாள் மாநிலத்தலைவர் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.


அடுத்ததாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆர்.வெங்கட்சுப்பு, முன்னாள் பொதுச்செயலாளர் பொறியாளர் A.M. பாபு, முன்னாள் பொதுச்செயலாளர் பொறியாளர் T.P. பாலசுப்ரமணியன், அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் முன்னாள் தென்மண்டல செயலாளர் V.V.சிதம்பரம், REAT குறைதீர்க்கும் செயலர் M.பலராமன், முன்னாள் தலைவர் பொறியாளர் N.கணேசபிரகாஷ், முன்னாள் வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் N.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கட்டிட குழுத்தலைவரும் சென்னை கிளையின் தலைவருமான பொறியாளர் எஸ்.சண்முகானந்தன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்








## புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்














## இல்லம் புனரமைப்பு நன்கொடை அளித்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. M.நாகரத்தினம் | செ.பொ | வேலூர் | ரூ.25000/- |
| 2. R.S.சுந்தரம் | உ.பொ | காஞ்சிபுரம் | ரூ.25000/- |
| 3. G.ரமேஷ்குமார் | உ.செ.பொ | மதுரை | ரூ.15000/- |
| 4. G.விஜயசேகர் | இ.பொ | கோயம்புத்தூர் | ரூ.10000/- |
| 5. K.R.ஜெயராமன் | உ.பொ | திருச்சி | ரூ.10000/- |
| 6. S.முருகேசன் | இ.பொ | கன்னியாகுமரி | ரூ.10000/- |
| 7. K.ஆதிச்செல்வி | இ.பொ | சென்னை | ரூ.7000/- |
| 8. M.லோககுரு | உ.செ.பொ | மதுரை | ரூ.3000/- |
| 9. M.தாணுமூர்த்தி | உ.பொ | கன்னியாகுமரி | ரூ.5000/- |
| 10. B.லட்சுமி | உ.செ.பொ | கன்னியாகுமரி | ரூ.5000/- |
| 11.S. ஜெயக்குமார் | இ.பொ | கன்னியாகுமரி | ரூ.5000/- |
| 12.R. வெங்கடசுப்பு | உ.செ.பொ (ஓ) | சென்னை | ரூ.5000/- |
| 13.G. அண்ணாமலை | உ.பொ | புதுக்கோட்டை | ரூ.5000/- |
| 14.T.S. பார்த்தீபன் | உ.பொ | புதுக்கோட்டை | ரூ.5000/- |
| 15.N. பாஸ்கர் | உ.பொ | புதுக்கோட்டை | ரூ.5000/- |
| 16.K. இராமச்சந்திரன் | இ.பொ | திருச்சி | ரூ.5000/- |
| 17.S. கணேசமூர்த்தி | உ.பொ | தேனீ | ரூ.5000/- |
| 18.M. இராமமூர்த்தி | உ.செ.பொ | மதுரை | ரூ.5000/- |
| 19.S. பிச்சை முருகன் | உ.செ.பொ | மதுரை | ரூ.5000/- |
| 20.T. சையதுஅப்பாஸ்அலி | உ.பொ | மதுரை | ரூ.5000/- |
| 21.G. இளங்கோவன் | உ.பொ | மதுரை | ரூ.5000/- |
| 22.A.G.A. பாபுராஜ் | இ.பொ | திருவாரூர் - நாகை | ரூ.5000/- |
| 23.K. சிவக்குமார் | இ.பொ | திருவாரூர் - நாகை | ரூ.5000/- |
| 24.K.N. ரஞ்சன் | உ.பொ | கோயம்புத்தூர் | ரூ.5000/- |
| 25.J. ரவீந்திரன் | உ.பொ | இராமநாதபுரம் | ரூ.5000/- |
| 26.P. ஆசைத்தம்பி | உ.செ.பொ (ஓ) | சேலம் | ரூ.2000/- |
| 27.M. சின்ராஜ் | இ.பொ | ஈரோடு | ரூ.2000/- |
| 28.P. வடிவேல் | இ.பொ | ஈரோடு | ரூ.2000/- |
| 29.S.கலாவதி | செ.பொ | சென்னை | ரூ.1000/- |
| 30.B.ராஜம்மாள் | செ.பொ | சென்னை | ரூ.1000/- |
| 31.K.தவமணி | உ.செ.பொ | சென்னை | ரூ.1000/- |
| 32.N.கணேசபிரகாஷ் | செ.பொ(ஓ) | சென்னை | ரூ.1000/- |

# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்







## புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்









# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம்  திறப்பு விழா நிகழ்வுகள்









புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம்
திறப்பு விழா நிகழ்வுகள்









# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம்
# திறப்பு விழா நிகழ்வுகள்








# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்











# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்











# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் திறப்பு விழா நிகழ்வுகள்






தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம்
திறப்பு விழா அழைப்பிதழ்

நாள் : 02.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

இடம் : எண். 19/10, பொறியியல் இல்லம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

வரவேற்புரை : பொறி. எஸ். கண்ணன், டி.சி.இ., பி.இ.,
செயலாளர் (அமைப்பு & சட்டம்), தமிழ்நாடு பொறியியல் சங்கம்

தலைமை : பொறி. எஸ். லீலாவதி, டி.சி.இ., பி.இ.,
மாநிலத் தலைவர், தமிழ்நாடு பொறியியல் சங்கம்

முன்னிலை : பொறி. த. முருகேசன், டி.சி.இ., பி.டெக்., எம்.டெக்.,
பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம்

கட்டடத்தை திறந்து வைப்பவர் : பொறி. சி.ப. சண்முகம், எல்.சி.இ., பி.இ.,
முன்னாள் மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்

வாழ்த்துரை : பொறி. ஆர். வெங்கடசுப்பு, எல்.சி.இ.,
முன்னாள் மாநிலத் தலைவர்,
பொறி. ஏ.எம். பாபு, எல்.சி.இ., பி.இ.,
முன்னாள் பொதுச் செயலாளர்
பொறி. டி.பி. பாலசுப்ரமணியம், எல்.சி.இ.,
முன்னாள் பொதுச் செயலாளர்

நன்றியுரை : பொறி. எஸ். சண்முகானந்தன், டி.சி.இ., பி.இ., எம்.பி.ஏ.,
கட்டிடக் குழுத்தலைவர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளை

அனைத்து பொறியாளர் சகோதர, சகோதரிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும்
தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்
தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

வழங்கும்

# பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2019

**10 அல்லது 12-ம் வகுப்பு தேறியவர்களுக்கு மட்டும்**

**விண்ணப்பப்படிவம் (தெளிவாக எழுதவும்)**

1. மாணவர் / மாணவியர் பெயர் ..................................................................
2. தந்தை / பாதுகாவலரின் பெயர் ..................................................................
3. உறுப்பினர் எண் ..................................................................
4. முகவரி ..................................................................
5. மாணவர் / மாணவி உறுப்பினருக்கு உறவுமுறை ..................................................................
6. 10 அல்லது 12-ம் வகுப்பு தேர்வில் மொத்த மதிப்பெண்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) ..............................
7. 10 அல்லது 12-ம் வகுப்பில் சேர்ந்த ஆண்டு மாதமும் ......................
8. 10 அல்லது 12-ம் வகுப்பில் தேர்வில் வெற்றி பெற்ற மாதம் ஆண்டு முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவரா? ஆம் / இல்லை ....................

**சங்க உறுப்பினர் கையொப்பம்** **மாணவ / மாணவி கையொப்பம்**

## சான்றிதழ்

பொறியாளர் .................................. கிளைச் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் எண் ................ / சாதாரண உறுப்பினர் எண் ...................................... தொடர்ந்து 2017, 2018 மற்றும் 2019ம் ஆண்டில் உறுப்பினர் கட்டணம் / சிறப்பு நன்கொடை செலுத்தி உறுப்பினராக இருந்துள்ளார். மேற்படி உறுப்பினரின் மகன் / மகள் / சகோதரர் / சகோதரி 2019-ம் வருடம் மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்பு தேர்வில் முதல் முறையிலேயே ........................... மதிப்பெண்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என சான்றளிக்கிறோம்.

| உறுப்பினர் தொகை | இரசீது எண் | தேதி |
|---|---|---|
| 2017............................ | ............................ | .................... |
| 2018............................ | ............................ | .................... |
| 2019............................ | ............................ | .................... |

(உரிய விபரங்களை சரி பார்த்துக் கிளைச் செயலாளர் சான்றிதழ் அளித்தல் வேண்டும்)

செயலாளர்..........................................................கிளை

## தலைமைச் சங்கம்

மாணவர் / மாணவியின் பெயர் ..................................................................

சங்க உறுப்பினர் பெயர் ..................................................................

உறவு முறை ..................................................................

2019ம் வருட மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்புத் தேர்வில் மதிப்பெண்கள் பெற்று ..........................................................பரிசாக ரூ............................பெறுகிறார்.

**பொதுச் செயலாளர்** **தலைவர்**

## தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம்

## கல்விப் பரிசு திட்டம் - 2019

(10-ம் வகுப்புக்கும், 12-ம் வகுப்புக்கும் தனித் தனியாக)

**10-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ. 3000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 2000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 1000/- வீதம்

**12-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ.5000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 3000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 2000/- வீதம்

**திட்டம்:**

நமது சங்கத்தின் முன்னாள் மூத்த தலைவர்கள் பொறியாளர் எஸ்.கணபதி மற்றும் பொறியாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் சங்கத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் 1976 மற்றும் 1980-ம் ஆண்டு முதல் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இச்சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்த சகோதர / சகோதரிகளின் கல்வி நலனுக்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

2019-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 10-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

2019-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 12-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக

ரூ. 2000/- (ரூபாய் ஒரு இரண்டாயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

## தகுதி, கலந்து கொள்ளும் முறை மற்றும் விதிகள்:

1. 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்புகளில் முதல் தடவையிலேயே தேர்வு பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

2. தகுதியுடையோர் விண்ணப்பத்தினை, அதற்கென முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் கல்விப் பரிசுத் திட்டம் பெயரைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5 என்ற முகவரியிட்டு ரூ. 50 கிளையில் செலுத்தி உரிய ரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மதிப்பெண் பட்டியல் நகல் ஒன்று கிளைச் சங்க செயலரால் மூல மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிடப்பட்டு, சான்றிடப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

4. மேற்கூரிய வண்ணம் முழுமையாக நிரப்பப் பெற்ற படிவம் 31.07.2019-க்குள் மூடி முத்திரையிட்ட (Sealed) உறையில் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்திற்கு நேரடியாக வந்து சேர வேண்டும். 31.07.2019 க்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர் இச்சங்கத்தில் தொடர்ந்து 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் உறுப்பினராக சந்தா செலுத்திய இரசீதுகளின் எண்கள் பற்றிய விவரத்தினை கிளைச் செயலாளர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஆயுள் உறுப்பினராக இருப்பின் செலுத்திய சிறப்பு நன்கொடை அதற்கான விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புகின்ற முழு பொறுப்பு உறுப்பினர்களையே சாரும். குறிப்புகள் முழுமையாக விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அந்த விண்ணப்பம் தொடர்பாக கிளைச் சங்க பொறுப்பாளர்களையோ அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்தோ எந்த விளக்கமும் பெறாமலேயே நேரிடையாக நிராகரிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பத்துடன் மாணவ / மாணவியரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைத்து அனுப்புதல் வரவேற்கத் தகுந்தது மட்டுமல்ல, மிக அவசியமானது கூட, பரிசு பெறுவோரின் புகைப்படங்கள் பின்னர் கதிரில் வெளியிடப்படும்.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

Government of Tamil Nadu
2019

MANUSCRIPT SERIES

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.151, Dated 20th May 2019.**

(Vihari, Vaikasi-06, Thiruvalluvar Aandu 2050)

**ABSTRACT**

**ALLOWANCES** - Dearness Allowance - Enhanced Rate of Dearness Allowance from **1st January 2019** - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.313, Finance (Allowances) Department, dated: 18-09-2018.
2. From the Government of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi Office Memorandum No.1/1/2019-E-II(B), dated 27-02-2019.

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to State Government employees as detailed below:-

| Date from which payable | Rate of Dearness Allowance [per month] |
|---|---|
| [1] | [2] |
| 1-7-2018 | 9 per cent of Basic Pay |

2. Government of India in its Office Memorandum second read above has now enhanced the Dearness Allowance payable to its employees from the existing rate of 9% to 12% with effect from 1stJanuary 2019.

3. Following the orders issued by the Government of India, the Government sanction the revised rate of Dearness Allowance to the State Government employees as indicated below:

| Date from which payable | Rate of Dearness Allowance [per month] |
|---|---|
| [1] | [2] |
| 1-1-2019 | 12 per cent of Basic Pay |

4. The additional installment of Dearness Allowance payable under these orders shall be paid in cash with effect from 1-1-2019.

5. The payment of arrears of Dearness Allowance from January, 2019 to April, 2019 shall be drawn and disbursed immediately by existing cashless mode of Electronic Clearance System (ECS). While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

6. The Government also direct that the revised Dearness Allowance sanctioned above shall be admissible to full time employees who are at present getting Dearness Allowance and paid from contingencies at fixed monthly rates. The revised rates of Dearness Allowance sanctioned in this order shall not be admissible to part time employees.

7. The revised Dearness Allowance sanctioned in this order shall also apply to the teaching and non-teaching staff working in aided educational institutions, employees under local bodies, employees governed by the University Grants Commission/All India Council for Technical Education scales of pay, the Teachers/ Physical Education Directors/Librarians in Government and Aided Polytechnics and Special Diploma Institutions, Village Assistants in Revenue Department, Noon Meal Organisers, Child Welfare Organisers, Anganwadi Workers, Cooks, Helpers, Panchayat Secretaries/Clerks in Village Panchayat under Rural Development and Panchayat Raj Department and other employees drawing pay in the prescribed Level of Pay in the Special Pay Matrix.

8. The expenditure shall be debited to the detailed head of account "03. Dearness Allowance" under the relevant minor, sub-major and major heads of account.

9. The Treasury Officers / Pay and Accounts Officers shall make payment of the revised Dearness Allowance when bills are presented without waiting for the authorization from the Principal Accountant General (A&E), Tamil Nadu, Chennai -18.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## நன்கொடை

இல்லம் புனரமைப்பு நிதியாக ரூ.50,000/- (ஐம்பது ஆயிரம் மட்டும்) வழங்கிய தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கத்திற்கு (REAT) தமிழ்நாடு பொறியியல் சங்கம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 240 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.05.2019)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | M. பக்தவத்சலம் | முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது (ம) தலைமைப் பொறியாளர் (பொது) |
| 2. | K. பத்மனாபன் | அரசு சிறப்பு செயலாளர் |
| 3. | M.K. சுகுமாறன் | தலைமைப் பொறியாளர் (அ.பணி) |
| 4. | P. குணசேகரன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 5. | M. சேகர் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 6. | S. அயூப்கான் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 7. | அமீலியா பால்ராஜ் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 8. | P. பாலசுப்ரமணியன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 9. | A. பிரகதீஸ்வரன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 10. | D. ரேவதி | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 11. | G. விஜயகுமார் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 12. | R. பாஸ்கர் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 13. | P. அன்பரசு | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 14. | R. ராதாகிருஷ்ணன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 15. | A. சுப்பிரமணியன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 16. | L. இளங்கோவன் | இணைத் தலைமைப் பொறியாளர் (மின்) |
| 17. | A. கலைமணி | இணை இயக்குநர் |
| 18. | P. கிருஷ்ணமூர்த்தி | செயற்பொறியாளர் |
| 19. | S. மனோகரன் | செயற்பொறியாளர் |
| 20. | A. ஹிலால் அஹமத் | செயற்பொறியாளர் |
| 21. | A. மீனாட்சி சுந்தர அரசு | செயற்பொறியாளர் (அ.பணி) |
| 22. | J. ஜெயக்குமார் | செயற்பொறியாளர் |
| 23. | K.S. செல்லமுத்து | செயற்பொறியாளர் |
| 24. | S. அப்பாஸ் அலி | செயற்பொறியாளர் |
| 25. | S. மதிவாணன் | செயற்பொறியாளர் |
| 26. | K. முருகன் | செயற்பொறியாளர் |
| 27. | K. இளங்கோவன் | செயற்பொறியாளர் |
| 28. | R. செல்வம் | செயற்பொறியாளர் |
| 29. | M. நாகரத்தினம் | செயற்பொறியாளர் |
| 30. | K. மோகன்ராஜ் | துணை இயக்குநர் |
| 31. | G. ஆனந்த லெட்சுமி | முதன்மை பணியாளர் அலுவலர் |

| | | |
|---|---|---|
| 32. | R. இராஜகோபால் | உதவி செயற்பொறியாளர் |
| 33. | N. ஜெயந்தி | உதவி செயற்பொறியாளர் |
| 34. | J. ஹரிஹரன் | உதவி செயற்பொறியாளர் |
| 35. | B. அசோகன் | உதவி செயற்பொறியாளர் |
| 36. | K. ராஜாராம் | உதவி செயற்பொறியாளர் |
| 37. | N. சுகுமார் | உதவி வானொலி பொறியாளர் |
| 38. | M. நிர்மலா தாயம்மாள் | தலைமை வரை தொழில் அலுவலர் |
| 39. | G. நாகராஜ் | தலைமை வரை தொழில் அலுவலர் |
| 40. | R. பென்னியமின் பிரபு | தலைமை வரை தொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

எஸ்.கே. பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2019 /நாள் 30.05.2019ன் படி 31.05.2019 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | M. ரெஜினாமேரி | 18.05.1961 | ஆட்சி அலுவலர் |
| 2. | G. கோமதி நாயகம் | 17.05.1961 | ஆட்சி அலுவலர் |
| 3. | P. சண்முகம் | 09.05.1961 | ஆட்சி அலுவலர் |
| 4. | P. கண்ணன் | 19.05.1961 | உதவிப் பொறியாளர் |
| 5. | S. பாண்டியன் | 25.05.1961 | உதவிப் பொறியாளர் |
| 6. | S. சுப்பிரமணியன் | 30.05.1961 | இளம் பொறியாளர் |
| 7. | B. முருகேசன் | 25.05.1961 | இளம் பொறியாளர் |
| 8. | R. ராஜசேகரன் | 30.05.1961 | இளம் பொறியாளர் |
| 9. | S. திருநாராயணன் | 01.06.1961 | இளம் பொறியாளர் (மின்) |

**ஒம்/- M. பக்தவத்சலம்**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம), தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

## இல்லம் புனரமைப்பு நன்கொடை அளித்தவர்கள்

| | | |
|---|---|---|
| 1. V.V.சிதம்பரம் | TWAD | ரூ.5000/- |
| 2. M.கோதன்டராமன் | REAT | ரூ.2000/- |

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் R.ப்ரிதிவிராஜ் செ.பொ (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர் தொகை ரூ.2450/- (இரண்டாயிரத்து நானூற்றி ஐம்பது மட்டும்) இல்லம் புனரமைப்பு நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் தலைவர் பொறியாளர் S.ஆறுமுகம் உ.செ.பொ அவர்கள் தனது மகள் திருமணத்தை முன்னிட்டு சங்க வளர்ச்சி நிதியாக ரூ.2000/- (இரண்டாயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் பொருளாளர் பொறியாளர் S.பாண்டியன் இ.பொ (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர் தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் G.கோபால் இ.பொ (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர் தொகை ரூ.1400/- (ஆயிரத்து நானூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் கிளை உறுப்பினர் பொறியாளர் A.குருசாமி உ.செ.பொ (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர் தொகையில் ரூ.1000/- (ஆயிரம் மட்டும்) மைய சங்க வளர்ச்சி நிதியாகவும் ரூ.1425/- விருதுநகர் கிளை வளர்ச்சி நிதியாகவும் வழங்கியுள்ளார்.

## இல்லம் புனரமைப்பு நன்கொடை வழங்கிய கிளைகள்

1. ஈரோடு கிளை ரூ.8000/-

## வேண்டுகோள்

அனைத்து கிளைகளில் இருந்தும் மையச்சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை உடனடியாக செலுத்துமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். மேலும் இல்ல மராமத்து பணிக்கு கிளைகளிலிருந்து செலுத்த வேண்டிய தொகைகளை சிறப்பு கவனம் கொண்டு உடனடியாக செலுத்துமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

- கொ.கமால்தீன்
நிதிச்செயலாளர்

# புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம்
# திறப்பு விழா நிகழ்வுகள்





Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**JUNE 2019**

புதுப்பிக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லத்தின் முதல் தளம் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கத்தை முன்னாள் பொதுச்செயலாளர் பொறியாளர் A.M.பாபு அவர்கள் திறந்து வைக்கிறார்.



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on**
**14.06.2019**

**REGD. NEWS PAPER**

POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,